அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07.
1993, செப்டம்பர் மாதம் 21 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

கடமையிலீடுபட்டிருக்கும் போது காயத்துக்கு உள்ளாகும்
அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.

நிரந்தர ஓய்வூதியமுடைய பதவியை வகிக்கும் அல்லது வகிக்காத (படை தாங்கு சேவைகள், பொலீஸ் உத்தியோகத்தர் அல்லாத) அரசாங்க உத்தியோகத்தருக்கு அல்லது நீதித்துறை உத்தியோகத்தருக்கு கீழ்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் காயங்களின் காரணமாக குறிப்பிட்ட உத்தியோகத்தரின் தொழிலுக்கு இணங்க உழைக்கும் திறன் குறைதல், இல்லாமல் போதல் அல்லது உடம்பில் நிலையான உருச் சிதைவு தொடர்பாக இந்த சுற்று [illegible] காட்டப்பட்டுள்ளபடி நட்டஈடு செலுத்துதல் வேண்டும்.

(அ) அவரின் கடமைகளை நிறைவேற்றும் போது,

அல்லது (ஆ) அவர் கடமையில் ஈடுபடாத சந்தர்ப்பத்திலேனும் அவரின் சாதாரண கடமைகளின் நோக்கெல்லைக்குள் வருகின்ற ஏதேனும் செயலொன்றை புரிகையில்,

அல்லது (இ) அவரின் கடமைகளை நிறைவேற்றுகையில் புரியப்படும் ஏதேனும் செயலொன்றின் விளைவாக,

அல்லது (ஈ) தாம் வதியும் இடத்திலிருந்து கடமைக்கு வருகை தருவதற்கா அவரின் வேலைத் தலத்திற்கு அல்லது,

அவரின் வேலைத் தலத்திலிருந்து கடமை முடிந்த பின்னர் தா வதியும் இடத்திற்கு பிரயாணம் செய்யும் போது,

அல்லது (உ) சேவைத்தலத்திலிருந்து கடமைகளில் ஈடுபடும் பொருட்டு செல்லும் பயணத்தின் போது மற்றும் தனது சேவைநிலையத்திற்கு திரும்பிவரும் பயணத்தின் போது காயமேற்பட்டால் இந்த சுற்றறிக்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு நட்ட ஈடு செலுத்தப்படல் வேண்டும்.

அவ்வாறாயினும் அந்த உத்தியோகத்தருக்கு காயமேற்படுதல்,

(1) ஏதேனும் சட்டமொன்றை, திணைக்கள கட்டளையொன்றை பிரமாணங்க மீறும் விதத்தில் செயற்பட்டதன் விளைவாக எனின், அல்லது/மற்றும்

(11) உத்தியோகத்தரின் கவனமின்மையின் விளைவாக எனின், அவருக்கு கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையில் குறைத்தல்க மேற்கொள்ளல் வேண்டும்.

(111) உத்தியோகத்தர்குடிபோதையில் இருப்பின் அவருக்கு நட்டஈடு செலுத்தலாக

02. இப்பிரிவின்படி . செலுத்த வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை கணக்கிடும் போது அடிப்படையாக கொள்ளப்படுவது அவ்வாறு காயம் ஏற்பட்டதால் (உத்தியோகத்தரின் தொழிலுக்கு ஏற்ப) அவரின் உழைப்புச் சக்தி குறைதலின் அல்லது உடலில் நிரந்தர உருச்சிதைவு ஏற்படுதலின் அளவேயாகும்.

(அ) நிதி நட்டஈடு

(1) காயத்தினால் மரணம் ஏற்பட்டால் – இந்தச் சுற்றறிக்கையின் 5வது பிரிவில் காட்டப்பட்டுள்ள நட்டஈடுகள் வழங்குதல் தொடர்பாகச்செயற்படும் குழுவின் சிபாரிசின் பேரில் ஒய்வூதியப் பணிப்பாளரால் உத்தியோகத்தர்களின் தங்கியிருப்போருக்கு 60மாதச் சம்பளம்.

(11) அந்த காயத்தினால் நிரந்தரமானதும் முழுமையானதுமான இயலாமைக்கு (ஊனமடைதல்) உட்படுமிடத்து – இந்தச் சுற்றறிக்கையின் 5வது பிரிவில் காட்டப்பட்டுள்ள நட்டஈடு செலுத்தும் குழுவினால் சேவைக்குத்தகுதியற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் 60மாதச் சம்பளம் நட்டஈடாகச்செலுத்தப்படுவதுடன் குறிப்பிட்ட திணைக்களத் தலைவரின்சிபாரிசு, மருத்துவச்சபையின் அறிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். "நிரந்தர இயலாமையின் கீழ் நோயாளியொருவரை வகைப்படுத்தும் போது உழைப்புச் சக்தியின் குறைதல்/ இயலாமையின் நூற்றுவீத அளவை மருத்துவச் சபையானது குறிப்பிடாது. நோயாளி அவரின் நிகழ்காலத்தொழிலைப்புரிவதற்குத் தகமையற்றவர் எனவும் அவர் "நிரந்தரமானதும் முழுமையானதுமான இயலாமைக்கு உட்பட்டிருப்பதாக (அங்கவீனம்) அந்த அறிக்கை குறிப்பிடும்.

(111) இந்த காயத்தினால் நிரந்தர அரைவாசி இயலாமைக்கு உட்படு – இந்த சுற்றறிக்கையின் இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கு இணங்க மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட உழைப்புச் சக்தி குறையும் நூற்றுவீதத்தை அடிப்படையாகக் கொண்டு 45மாத சம்பளத்தின் நூற்று வீதத்துக்கேற்ப இந்தச் சுற்றறிக்கையின் 5வது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நட்டஈடு வழங்குதல் தொடர்பான குழுவினால், செலுத்தப்பட வேண்டிய நட்டஈடு தீர்மானிக்கப்படும். நோயாளி அவரின்நிகழ் காலத்தொழிலின் பொருட்டுத் தகமையற்றவராகுமிடத்து அத்தகைய நோயாளியொருவரை இந்த வகையின் கீழ் வைத்தியச் சபையினால் வகைப்படுத்தமாட்டார்கள்.

( அந்தக்காயத்தால் தற்காலிக அரைவாசி இயலாமை நிலைக்கு உட்படும்போது – சுகாதார விடயத்துக்குப் பொறுப்பாக அமைச்சின் செயலாளரால் வழங்கப்படும் அறிவுறுத்துரைகளுக்கு இணங்க மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள (தற்காலிக) உழைப்பு சக்தி குறையும் நூற்று வீதத்தை அடிப்படையாகக் கொண்டு 10 மாதச சம்பளத்தின் நூற்றுவீத அளவாக இந்த சுற்றறிக்கையின் 5வது பந்தியில் குறிப்பிட்ட நட்டஈடுகள் செலுத்துதல் தொடர்பாகச்செலுத்தப்பட வேண்டிய நட்டஈடு தீர்மானிக்கப்படும். மருத்துவச் சபையின் சோதனைக்கு உட்படுத்தும் சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தான் உள்ளாகியிருந்த தற்காலிக இயலா நிலையை மருத்துவச் சபையானது கருத்தில் கொள்ளும்.

நோயாளியின் உழைப்புச் சக்தி குறைதல் மற்றும்/அல்லது நிரந்தர உருச்சிதைவு தொடர்பாக தீர்மானிக்கும் பொருட்டு பிராந்திய சுகாதார/ பணிப்பாளர் அவர்கள் மருத்துவச் சபையொன்றை நியமிப்பார். சேவைகள்

(ஆ) நட்டஈடு ஒய்வூதியங்கள்

(1) காயமடைந்ததால் மரணமடையும் அல்லது நிரந்தர இயலாமைக்கு (அங்கவீனத்துக்கு) உட்படும் உத்தியோகத்தரொருவர் 55 வயதுக்கு குறைந்தவராக இருப்பின் அவர் கற்பனை செய்யப்பட்ட 55 வயதில் இளைப்பாறியவராக கருத்திற் கொண்டு ஒய்வூதியம் கணக்கிடு செய்யப்படும்.

(11) அவ்வாறு மரணமடையும் அல்லது முழுமையான இயலாமைக்கு உட்படும் உத்தியோகத்தரொருவர் 55 வயதுக்கு மேற்பட்டவராயின் அவர் கற்பனை செய்யப்பட்ட 60வயதில் சென்றவராக கருத்திற் கொண்டு ஒய்வூதியம் கணிப்பீடு செய்யப்படும். இதற்கேற்ப ஒய்வூதியக் குறிப்பு மாற்றஞ் செய்யப்படும்.

(இ) லீவுகள்

காயத்தின் தன்மைக்கேற்ப மருத்துவச் சபையின் சிபாரிசுக்கு ஏற்ப கீழ் வருமாறு லீவுகள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

(1) வருடமொன்றுவரை சம்பளமுள்ள லீவுகளும் அதன் பின்னர் 6 மாதம் வரை அரைச்சம்பள லீவுகளும்.

(11) மேல் (1)இல் காட்டப்பட்டுள்ள ஓராண்டு லீவுக்கு மேலதிகமாக தனக்குரித்தான கடந்த லவில் பெற்றுக் கொள்ள உத்தியோகத்தருக்கு அனுமதி உண்டு.

(மேல் ஏற்பாடுகளை உள்ளடக்கி தாபனக்கோவை திருத்தப்படும்.)

04. நட்டஈடு செலுத்தும் பொருட்டு தேவைப்படும் ஆதரவுச் சான்றுகள்

(அ) (1) திணைக்களத் தலைவர் காயமடைந்த உத்தியோகத்தரை உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(11) அவர் மருத்துவச் சபையொன்றை நியமிக்கும் வண்ணம் உடனடியாக வேண்டுகோளொன்றைச் செய்யலாம்.

(111) மருத்துவ பரிசீலனை சபை),

இந்த சுற்று நிருபத்தின் 2வது பிரிவில் நோயாளி எந்த வகைக்குரியவர் என்பதையும் மற்றும்/அல்லது உழைப்புச் சக்தி குறைந்துள்ள நூற்று வீதம் மற்றும்/அல்லது உடம்பில் நிரந்தரமான உருச்சிதைவு ஏதாவது இருப்பின் அதை நோயாளியின் சாதாரண கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள தகுதி அவ்வுத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டிய லீவு ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவ் அறிக்கையைத் திணைக்களத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆ) சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான செயலாளரால் இந்த ஏற்பாடுகளை பின்பற்றும் பொருட்டு தேவைப்படும் அறிவுறுத்துரைகளை அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். மேலும் உத்தியோகத்தர்கள் (இந்த முறையின் கீழ் நட்டஈடு பெற உரிமையுள்ள அரசாங்க உத்தியோகத்தராக அல்லது நீதித்துறை உத்தியோகத்தராக இருக்குமிடத்து) தலைமாட்டுச் சீட்டு உட்பட அனைத்து அறிக்கைகளையும் பூறம்பாகப் பதிவேட்டறையின் கபினட்டுகளில் மருத்துவச் சபையின் உபயோகத்தின் பொருட்டு இலகுவாகத் தேடிக் கொள்ளக் கூடிய விதத்தில் பாதுகாப்பாக வைக்குமாறு அனைத்து மருத்துவ உத்தியோகத்தர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

05. <u>தீர்மானிக்கும் அதிகாரி</u>

திணைக்களத் தலைவர் மருத்துவச் சபையின் அறிக்கையையும், பொலிஸ் அறிக்கையையும், திணைக்களப் பரிசீலனை அறிக்கையையும், விபத்துத் தொடர்பான வழக்கின் தகவல்களையும் அவரின் சிபாரிசுகளையும், சட்டத்தை மீறல், திணைக்களப் பிரமாணங்களை மீறுதல், உத்தியோகத்தரின் கவனமின்மை தொடர்பான அவரின் ஆய்வுகளுடன் தாபனப் பணிப்பாளருக்கு முன்னளித்தல் வேண்டும். நட்டஈடு செலுத்துதல் தாபன பணிப்பாளர், ஓய்வூதியப் பணிப்பாளர், திறைசேரியின் நிதிப் பணிப்பாளர் ஆகியோர்களைக் கொண்ட சபையினால் தீர்மானிக்கப்படும்.

06. இத்திட்டம் 1993.-10-01....ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்கும். 86.08.10ஆந் திகதி 346ஆம் இலக்கமுள்ள சுற்றறிக்கையை 1993.10.01ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்கின்றேன்.

07. இத்துடன் உள்ள இணைப்பு (1) 1988.07.13ஆந் திகதி 21/88ஆம் இலக்கமும், 1989.11.30ஆந் திகதி 59/89ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு ( ) ஏற்புடையதாகும்.

ஒப்பம்: எம்.டி.டி.பீரிஸ்,
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

இணைப்பு . 1

## 1-ஆம் அட்டவணை.

(2 (1) வது பிரிவு.)

### நிரந்தர பகுதி இயலாமையை ஏற்படுத்தும் காயங்கள் பற்றிய அட்டவணை.

| காயங்கள் | உழைக்கும் திறன் குறையும் நூற்று விதம். |
|---|---|
| நிரந்தர படுக்கையில் இருக்கும்வண்ணம் நிரந்தரமாகவும் பாரதூரமாகவும் உறுப்புக்கள் சோர்வாதமடைதல் அல்லது காயமடைதல். | 100 |
| தொழிலாற்றுவதில் திறனின்மை ஏற்படும் நிரந்தரமாக தீராவருத்தமாக உளத்தளர்ச்சியினை ஏற்படுத்தும் அல்லது நிரந்தரமாக தொழில் புரியும் முழுமையான திறனின்மையை ஏற்படுத்தும் வேறேதேனும் காயம். | 100 |
| **கண்ணில் காயம்.** | |
| (1) இரண்டு கண்களினதும் பார்வை முழுமையாக இல்லாமல் போதல் | 100 |
| (11) ஒரு கண்ணில் பார்வை முழுமையாக இல்லாமல் போதல் | 50 |
| (111) ஒரு கண்ணில் பார்வை ஓரளவு இல்லாமல் போதல் | 25 |
| **செவியில் ஏற்படும் ஊனங்கள்** | |
| (1) முழுமையாக செவி கேட்காமல் போதல் | 60 |
| (11) ஒரு செவி முழுமையாக கேட்காமல் போதல் | 30 |
| (111) ஒரு செவி ஓரளவு கேட்காமல் போதல் | 15 |
| **பேசமுடியாமல் போதல்** | |
| (1) முழுமையாக பேச இயலாமை | 75 |
| (11) ஓரளவு பேச இயலாமை | 35 |
| **உறுப்புக்கள் இல்லாமல் போதல்** | |
| (1) வாசம் சுவை என்பவற்றை உணரும் உறுப்புக்கள் முழுமையாக இல்லாமல் போதல் | 50 |
| (11) வாசத்தை உணரும் உறுப்பு முழுமையாக இல்லாமல் போதல் | 25 |
| (111) சுவை உணரும் உறுப்பு முழுமையாக இல்லாமல் போதல் | 25 |
| **கரத்தில் ஏற்படும் காயங்கள்** | |
| (1) முழங்கைக்கு மேல் பின் முன்னங்கை இல்லாமல் போதல் | 75 |
| (11) முழங்கைக்கு கீழ் முன்னங்கை இல்லாமல் போதல் | 65 |
| **கையில் காயங்கள்** | |
| (1) இரண்டு கைகளும் இல்லாமல் போதல் | 100 |
| (11) கை அல்லது பெருவிரல் மற்றும் நான்கு விரல்கள் இல்லாமல் போதல் | 65 |
| (111) பெருவிரல் (முழுமையாக) இல்லாமல் போதல் | 35 |
| (iv) பெருவிரல் (ஒருபகுதி மாத்திரம்) இல்லாமல் போதல் | 20 |
| (v) நான்கு விரல்களும் இல்லாமல் போதல் | 60 |

குறிகாட்டி விரல் இல்லாமல் போதல்

| | | |
|---|---|---|
| (1) | 3மொழிகள் | 30 |
| (11) | 2மொழிகள் | 20 |
| (111) | 1மொழி | 10 |

நடுவில்ச்சிறுவிரல்

| | | |
|---|---|---|
| (1) | முழுமையாக இல்லாமல் போதல் | 20 |
| (11) | இரண்டு வரல்கள் இல்லாமல் போதல் | 10 |
| (111) | ஒரு நடுவிரல் மாத்திரம் காணாமல்போதல் | 05 |

கால் இல்லாமல் போதல்

| | | |
|---|---|---|
| (1) | முழங்கால் அல்லது அதற்கு மேல் | 75 |
| (11) | முழங்கால் அல்லது அதற்கு கீழ் | 65 |

பாதங்களில் காயம் ஏற்படல்

| | | |
|---|---|---|
| (1) | இரண்டு பாதங்களும் இல்லாமல் போதல் | 100 |
| (11) | ஒரு பாதம் மாத்திரம் இல்லாமல் போதல் | 75 |
| (111) | பாதமொன்று ஓரளவில் வலுவிழத்தல் | 35 |

காலில் விரல்கள் இல்லாமல் போதல்

| | | |
|---|---|---|
| (1) | இரண்டு பகுதிகளும் | 20 |
| (11) | பெருவிரலில் ஒரு பகுதி மாத்திரம் | 10 |
| (111) | பெருவிரல் அல்லாத ஒன்றுக்கு மேற்பட்ட விரல்கள் இல்லாமல் போகுமிடத்து அதன் ஒவ்வொரு விரலுக்கும் | 10 |

பலவகையான

| | | |
|---|---|---|
| (1) | உறுப்பொன்று முழுமையாக இல்லாமல் போதல் | 75 |
| (11) | உறுப்பொன்றின் குறிப்பிட்ட பகுதி இல்லாமல் போதல் | 40 |
| (111) | முகத்தில் பாரிய தழும்புகள் ஏற்படல் உறுப்புச்சிதைவு ஏற்படல் | 75 |
| (iv) | முகத்தில் தழும்புகள் ஏற்படல் அல்லது முகத்தில் உருச்சிதைவு அடையாத உடம்பில் பாரிய உருச்சிதைவு ஏற்படும்–உச்சம் | 50 |
| (v) | பல்லொன்று இல்லாமல் போதல் | 05 |
| (vi) | மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய மேல் குறிப்பிடப்படாத ஏதேனும் உறுப்புக்கள் அல்லது அவற்றின் ஏதேனும் உறுப்புக்கள் | 50 |

குறிப்பு :- பெற்றுக் கொள்ளக் கூடிய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு காயம் பெற்ற சந்தர்ப்பத்தில் நோயாளி எதிர் நோக்கியிருந்த தற்காலிக இயலாமையின் பொருட்டு 10% ஆகக் கூடியது 10%வரை சிபாரிசு செய்யலாம்.

ஏதேனுமோர் விபத்தொன்றின் போது மதிப்பீடு 100% வீத்தை தாண்டலாகாது.